# கிறிஸ்தவ நம்பிக்கைகள்

## தேர்வு விடைக் குறிப்பேடு

*டாக்டர். ஸ்டீபன் கிப்ஸன்*

shepherds
GLOBAL CLASSROOM

## *பாடம் 1*

## தேவனுடைய புத்தகம்

*(1) பொதுவான வெளிப்பாடு என்றால் என்ன?*

*சிருஷ்டிப்பைக் கவனிப்பதில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய தேவனைப் பற்றிய சத்தியம்*

*(2) தேவன் எந்த வடிவங்களில் சிறப்பு வெளிப்பாட்டைக் கொடுத்துள்ளார்?*

- *வேதாகமத்தின் ஏவப்படுதல்*
- *இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தில் வந்த மனித அவதாரம்*

*(3) பொதுவான வெளிப்பாட்டால் வெளிப்படுத்தப்படாத எந்த சத்தியங்கள் சிறப்பு வெளிப்பாடு மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன?*

- *இது தேவனை விவரிக்கிறது.*
- *இது வீழ்ச்சி மற்றும் பாவத்தை விளக்குகிறது.*
- *தேவனோடு ஒப்புரவாகும் வழியைக் காண்பிக்கிறது.*

*(4) வேதாகமம் தனக்கென்று எதை உரிமைக் கோருகிறது?*

*அது தேவனுடைய வார்த்தை என்று உரிமைக் கோருகிறது.*

*(5) வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை என்பதை எந்த ஆறு காரணங்கள் காட்டுகின்றன?*

- *ஆயிரக்கணக்கான வேதாகம உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.*

- *வேதாகமத்தின் எந்த கூற்றும் நிராகரிக்கப்படவில்லை.*
- *வேதாகமம் தன்னில்தானே முரண்படவில்லை.*
- *சுவிசேஷம் அதன் விளைவுகளால் நிரூபிக்கப்படுகிறது.*
- *தேவனுடைய ஆவியானவர் வேதாகமத்தின் மூலம் பேசுகிறார்.*
- *தேவனோடுள்ள நம் உறவில் வேதாகமம் வழிநடத்துகிறது.*

*(6) வேதாகமம் ஏன் "உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"?*

*ஏனென்றால் அது தேவனால் ஏவப்பட்டது.*

*(7) எழுத்தாளர்கள் தவறு செய்யாமல் தடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் ஏவுதலைப் பற்றி வேதாகமம் என்ன விளக்கத்தைக் கொடுக்கிறது?*

*அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் "ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:20-21).*

*(8) எவுதலுக்காக தேவன் பயன்படுத்திய சில பல்வேறு முறைகள் யாவை?*

- *கேட்கக்கூடிய சத்தம்*
- *சொப்பனங்கள்*
- *தரிசனங்கள்*
- *புரிதல் மற்றும் மேற்பார்வையை வழங்குதல்*

*(9) வேதாகமம் ஏவப்பட்டது என்பதன் அர்த்தம் என்ன?*

*இது முற்றிலும் தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது, சகல வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தை.*

*(10) வேதாகமம் தவறில்லாதது என்பதன் அர்த்தம் என்ன?*

- *அது தோல்வியடைய முடியாது.*
- *அதை நம்பலாம்.*
- *அது நம்மை ஒருபோதும் தவறாக வழிநடத்தாது.*

*(11) வேதாகமம் பிழையற்றது என்பதன் அர்த்தம் என்ன?*

*அது கூறுகிற ஒவ்வொரு கூற்றிலும் பிழை இல்லாமல் உள்ளது.*

## *பாடம் 2*

# தேவனுடைய பண்புகள்

*(1) ஒரு மனிதனின் மிக முக்கியமான பண்பு என்ன?*

தேவனைப்பற்றிய அவனது கருத்து

*(2) சாத்தியமுள்ள மிகக் கடுமையான பிழை எது?*

தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பது குறித்த தவறான புரிந்துகொள்ளுதல்

*(3) தேவனைப் பற்றிய வேதாகமத்தின் முதல் பாடம் என்ன?*

அவர் சகலத்தையும் சிருஷ்டித்த சிருஷ்டிகர் (மற்றும் குறிப்பாக, அவர் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டவர்).

*(4) ஒவ்வொரு கூற்றுக்கும் பொருந்தக்கூடிய தேவனுடைய பண்பின் பெயரைக் குறிப்பிடுக:*

- தேவன் எப்படிப்பட்டவராய் இருக்கிறார் என்பதை நம்மால் விவரிக்க முடியாது: *ஆவியாயிருக்கிறார்*
- தேவன் எப்போதும் இருக்கிறார்: *நித்தியமாணவர்*
- தேவன் ஒரு ஆள்தன்மையற்ற சக்தி அல்ல: *ஆள்தன்மையுள்ளவர்*
- தேவனுடைய இயல்பு எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும்: *மாறாதவர்*
- தேவன் தேர்ந்தெடுக்கும் எதையும் அவரால் செய்ய முடியும்: *சர்வ வல்லமையுள்ளவர்*
- தேவன் எல்லாவற்றையும் பார்க்கிறார்: *எல்லா இடங்களிலும் இருக்கிறார்*
- தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார், அதனால் நாம் இரக்கம் கொள்ளலாம்: *அன்புள்ளவர்*

- தேவன் தனது இயல்பில் மூன்று நபர்களைக் கொண்டுள்ளார்: *திரித்துவமானவர்*
- தேவனுக்கு முழுமையான தார்மீக பரிபூரணம் உள்ளது: *பரிசுத்தர்*
- தேவனுடைய செயல்கள் எப்போதும் நியாயமானவை மற்றும் நீதியானவை: நீதியுள்ளவர்

## பாடம் 3

# திரித்துவம்

*(1) தேவனுடைய இயல்பைப் பிரபஞ்சம் எவ்வாறு விளக்குகிறது?*

> *பிரபஞ்சத்தின் மூன்று மடங்கு வடிவமைப்பில் விளக்குகிறது: இடம், காலம் மற்றும் பொருள், அவை ஒவ்வொன்றும் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது.*

*(2) திரித்துவக் கோட்பாட்டிற்கு எந்த மூன்று வேதாகம மூலக்கூறுகள் அடித்தளமாக உள்ளன?*

- *தேவன் ஒருவரே.*
- *பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் அனைவரும் தேவன்.*
- *அவர்கள் மூவரும் தனித்தனி நபர்களாக ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்கிறார்கள்.*

*(3) திரித்துவத்திற்குள் உள்ள உறவுகளின் அமைப்பு என்ன?*

> *குமாரன் பிதாவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து வருகிறார். வரிசையானது பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்.*

*(4) திரித்துவத்தின் உறவுகளைப் பிரதிபலிக்க வேண்டிய சில மனித உறவுகள் யாவை?*

> *குடும்பம் மற்றும் திருச்சபை.*

*(5) திரித்துவமாக வழிபடுவது என்றால் என்ன?*

> *திரித்துவத்தின் ஒவ்வொரு நபரும் ஆராதனைக்குத் தகுதியானவர்கள் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். நாம் பிதாவிடம், குமாரன் மூலம், ஆவியில்*

ஜெபிக்கிறோம், ஆனால் திரித்துவத்தின் அனைத்து நபர்களிடமும் ஜெபிக்கிறோம்.

*(6) மாடலிசத்தின் பிழை என்ன?*

தேவன் என்னும் ஒரே நபர் வெவ்வேறு பாத்திரங்களை ஏற்றவர் என்கிற கருத்து

*(7) திருமூர்த்தி என்பதன் பிழை என்ன?*

பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்கள் வெவ்வேறு நபர்கள் மற்றும் மூன்று தேவர்கள் என்கிற கருத்து

*(8) அடிபணிதல்வாதத்தின் பிழை என்ன?*

திரித்துவத்தில் உள்ள ஒருவர் மற்றவரை விட தாழ்ந்தவர் என்கிற எண்ணம்

# *பாடம் 4*

# *மனிதக்குலம்*

*(1) மனிதகுலத்தைப் பற்றிய கிறிஸ்தவ பார்வை மற்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?*

> *மனிதன் தேவனுடைய சாயலில் இருப்பதால் அவன் முக்கியமானவன் என்பதை ஒரு கிறிஸ்தவர் அறிவார்.*

*(2) மனிதகுலத்தில் தேவனின் சாயல் உடல் ரீதியானது அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்? மூன்று காரணங்களைக் கூறுக.*

- *தேவன் ஆவியாயிருக்கிறார்.*
- *மனிதனைப் போல அவரை சாயலாகச் செய்வது உருவ வழிபாடு.*
- *மனிதன் இப்பூமியில் வாழ்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளான்.*

*(3) மனிதகுலத்தில் தேவனுடைய சாயலின் ஒன்பது கூறுகளை பட்டியலிடுக.*

- *சிருஷ்டிப்பின் உள்ளுணர்வு*
- *சிந்திக்கும் திறன்*
- *தொடர்புகொள்ளும் திறன்*
- *ஒரு சமூக இயல்பு*
- *தார்மீக உணர்வு*
- *சுயசித்தம்*
- *அழியாத்தன்மை*
- *நேசிக்கும் திறன்*
- *ஆராதிக்கும் திறன்*

*(4) என்ன காரணத்திற்காக நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டுள்ளோம்?*

- *அதனால் நாம் தேவனை நேசித்து வழிபட முடியும்*
- *அதனால் நாம் தேவனுடன் உறவில் இருக்க முடியும்*

*(5) தார்மீக உணர்விலிருந்து என்ன திறன் வருகிறது?*

*சரி மற்றும் தவறு பற்றிய கருத்துக்களை புரிந்து கொள்ளும் திறன்*

*(6) தேவனைப் பிரியப்படுத்த நமது சுயசித்தத்தைப் பயன்படுத்த நமக்கு ஏன் தேவனின் கிருபை தேவை?*

*ஏனென்றால், பாவம் நம் சித்தத்தைச் சேதப்படுத்திவிட்டது, கிருபையில்லாமல் நாம் பாவத்தின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம்*

## *பாடம் 5*

## *பாவம்*

*(1) பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியதற்கான நான்கு காரணங்கள் யாவை?*

- *உலகின் நிலையைப் புரிந்து கொள்ள*
- *உலகில் தேவனின் முன்னுரிமைகளை புரிந்து கொள்ள*
- *கிருபை மற்றும் இரட்சிப்பை புரிந்து கொள்ள*
- *பரிசுத்தத்தை புரிந்து கொள்ள*

*(2) பாவம் தேவனின் தவறு அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?*

தேவன் சகலத்தையும் எந்தவித குறையுமில்லாமல், நிறைவாக செய்தார்.

*(3)* பின்வருவனவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியத்தில் வரையறைத் தருக: பரம்பரை சீரழிவு, மனப்பூர்வமாய் செய்த பாவம், தற்செயலான மீறல்கள் மற்றும் வியாதிகள்.

*பரம்பரை சீரழிவு* என்பது மனிதனின் தார்மீக இயல்பின் சிதைவு ஆகும், இது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தை நோக்கி இட்டுச் செல்கிறது.

*வேண்டுமென்றே செய்த பாவம்* என்பது தேவனின் அறியப்பட்ட சித்தத்தை நோக்கத்துடன் மீறுவதாகும்.

*எதிர்பாராத தற்செயலான மீறல்கள்* என்பது தற்செயலாக அல்லது அறியாமையால் தேவனுடைய வார்த்தையை மீறும் செயல்கள்.

*வியாதிகள்* என்பது உடல் அல்லது மன வரம்புகள் அல்லது சரீர குறைபாடுகள்.

*(4) நாம் ஏன் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்?*

- *தேவனைப் பிரியப்படுத்தாத எதையும் செய்ய நாம் விரும்பவில்லை.*
- *தற்செயலாக தவறு செய்தாலும் அவற்றிற்கும் மோசமான விளைவுகள் உண்டு.*
- *கிறிஸ்தவர்களாக நாம் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.*
- *நாம் தேவனுடைய சித்தத்தைத் தவிர்க்க முயற்சித்தால், நாம் பாவத்தின் குற்றவாளிகளாவோம்.*

*(5) வியாதி பாவம் அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?*

*இயேசுவுக்கு வியாதி இருந்தது ஆனால் பாவம் இல்லை.*

## பாடம் 6

## ஆவிகள்

*(1) தேவதூதர்கள் எப்போது சிருஷ்டிக்கப்பட்டார்கள்?*

பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு

*(2) தேவதூதர்கள் எவ்வளவு காலம் வாழ்கிறார்கள்?*

தேவதூதர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள்.

*(3) தேவதூதர்களுக்கு பொதுவாக சரீரங்கள் இல்லை என்பதை நாம் எப்படி அறிவோம்?*

தேவதூதர்கள் ஆவிகள்.

*(4) தேவதூதர்களுக்கு ஆள்தன்மை இருக்கிறது என்பதற்கான சில காரணங்கள் யாவை?*

- அவர்கள் பேசுகிறார்கள்.
- அவர்கள் ஆராதிக்கிறார்கள்.
- அவர்களுக்கு உணர்ச்சிகள் உண்டு.
- அவர்களுக்கு அறிவுசார் திறன் உண்டு.

*(5) வேதாகமத்தில் தேவதூதர்களைக் குறிக்கும் சில வித்தியாசமான வார்த்தைகள் யாவை?*

- கேருபீன்கள்
- சேராபீன்கள்
- பிரதான தூதர்கள்
- ஆவிகள்

*(6) விசுவாசிகளுக்கு தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?*

அவர்கள் பாதுகாக்கிறார்கள்.

*(7) அசுத்த ஆவிகளின் தோற்றம் என்ன?*

*அவர்கள் பாவத்தில் விழுந்துபோன தேவதூதர்கள்.*

*(8) விக்கிரகாராதனைக்காரர் உண்மையில் எதை வணங்குகிறார்கள்?*

*பிசாசுகள் / அசுத்த ஆவிகள்*

*(9) சாத்தான் மற்றும் பிற அசுத்த ஆவிகளின் முடிவான விதி என்ன?*

*அக்கினிக்கடல்*

## பாடம் 7

# கிறிஸ்து

*(1) மேசியாவின் முன்னுரிமை என்ன?*

*தன் ஜனங்களை பாவத்திலிருந்து விடுவிப்பது*

*(2) "இயேசுவே கர்த்தர்" என்று ஆரம்பகால திருச்சபை கூறியதன் அர்த்தம் என்ன?*

*அவர் தேவன், அனைவருக்கும் கர்த்தர் என்று அர்த்தங்கொண்டனர்*

*(3) இயேசு எப்படி தனிப்பட்ட முறையில் தேவனுடைய குமாரனாக இருக்கிறார்?*

*அவர் பிதாவின் தன்மையை முழுமையாக பகிர்ந்து கொள்கிறார்.*

*(4) இயேசு மாம்சத்தில் வந்த ஒரு அவதாரம் என்பதன் அர்த்தம் என்ன?*

*அவர் மாம்சத்தில் வந்த தேவன், அல்லது தேவன் மனிதன் ஆனார் என்பதாகும்.*

*(5) இயேசு ஒரு மனிதனாக இருப்பது ஏன் முக்கியம்? (மூன்று காரணங்கள்)*

- *அவர் நமக்காக மரிக்கமுடிந்தது.*
- *அவர் நம்முடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்.*
- *அவர் நம்மை பிரதிநிதித்துவப்படுத்தினார்.*

*(6) இயேசு தேவன் என்பதை நாம் உணர வேண்டியது ஏன் முக்கியம்?*

- *அவரது பலி எல்லையற்ற மதிப்புடையது.*

- *இரட்சிக்கும் வல்லமை அவருக்கு உண்டு.*
- *நாம் அவரை ஆராதிக்க வேண்டும்.*

*(7) ஒரு பலி ஏன் தேவைப்பட்டது?*

*அதனால் தேவன் அநீதி காண்பிக்காமல், மற்றும் பாவத்தை முக்கியமற்றதாக ஆக்காமல் பாவத்தை மன்னிக்க முடியும்.*

*(8) இயேசு ஏன் வேறு முகாந்தரத்தை தெரிந்துகொள்ளாமல் சிலுவையில் மரித்தார்?*

*அவர் தேவனுடைய சாபத்தை தன்மீது சுமந்தார் என்பதை இது காட்டுகிறது.*

*(9) இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் என்ன?*

- *இது பாவம் மற்றும் மரணத்தின் மீதான அவரது வெற்றியைக் காட்டியது.*
- *அவர் யார் என்பதை நிரூபித்தது.*
- *அவர் நம்மை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்ப முடியும் என்பதை இது காட்டுகிறது.*

## *பாடம் 8*

## *இரட்சிப்பு*

*(1) சிலுவை ஏன் பலருக்கு ஒரு இடறலாக இருக்கிறது?*

*ஏனென்றால் அவர்கள் பாவிகள் என்றும் மன்னிக்கப்பட வேண்டும் என்றும் அது அர்த்தப்படுத்துகிறது.*

*(2) ஒரு பாவியினுடைய நிலையின் நான்கு அம்சங்கள் யாவை?*

- *அவர் பல பாவச் செயல்களில் குற்றவாளி.*
- *அவர் தேவனின் எதிரி.*
- *அவர் தனது விருப்பங்களில் சீர்கேடு நிறைந்தவர்.*
- *அவர் தனது நிலையை மாற்ற சக்தியற்றவர்.*

*(3) பரிகாரம் இல்லாமல் மன்னிப்பது ஏன் தேவனை அவமதிக்கிறதாய் இருக்கிறது?*

*அது அவரை அநீதியுள்ளவராகவும், பரிசுத்தமில்லாதவராகவும் இருக்கிறார் என்னும் தோற்றத்தை அளிக்கும்.*

*(4) மனந்திரும்புதல் என்றால் என்ன?*

- *ஒரு பாவி தன்னை குற்றவாளியாகவும், தண்டனைக்கு தகுதியானவனாகவும் பார்க்கிறார்.*
- *அவர் தனது பாவங்களை விட்டுவிட தயாராக இருக்கிறார்.*

*(5) ஒருவருக்கு இரட்சிப்பின் விசுவாசம் உண்டெனில், அவர் விசுவாசிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?*

- *தன்னை நீதிமானாக்க அவரால் எதுவும் செய்ய முடியாது*

- கிறிஸ்துவின் சிலுவைப்பலி அவருடைய மன்னிப்புக்கு போதுமானது
- பாவத்தையும் மரணத்தையும் வென்றவராய், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்
- விசுவாசத்தினுடைய நிபந்தனையின் பேரில் தேவன் அவரை மன்னிக்கிறார்

*(6) எந்த இரு வழிகளில் பலியாக இருக்கத்தக்கதாக இயேசு தனித்துவமாக தகுதி பெற்றார்?*

- *அவர் பாவமில்லாதவர்.*
- *அவர் தேவன் மற்றும் மனிதன் ஆனவர்.*

*(7) தான் இரட்சிக்கப்பட்டதை ஒரு நபர் எப்படி உறுதியாக அறிந்துகொள்ள முடியும்?*

- *மெய்யான மனந்திரும்புதல்.*
- *தேவனுடைய வாக்குத்தத்தில் விசுவாசித்தல.*
- *ஆவியானவரின் சாட்சியைப் பெறுதல்.*

*(8) இரட்சிப்பின் சொற்களை சரியான சொற்றொடர்களுடன் பொருத்துக:*

| **சொல்** | **பதில், சொற்றொடர்** |
|---|---|
| *மீட்பு* | ***அ**, விலை கொடுக்கப்பட்டது* |
| *பரிசுத்தமாக்குதல்* | ***ஏ**, பரிசுத்தப்படுத்தினார்* |
| *பரிகாரம்* | ***ஊ**, சுத்தமான பதிவு* |
| *விடுதலை* | ***எ**, மீட்கப்பட்டது* |
| *முத்திரையிடுதல்* | ***இ**, அடையாளச் சின்னம்* |
| *ஒப்புரவாக்குதல்* | ***ஈ**, சமாதானம்* |
| *கிருபாதாரபலி* | ***உ**, கோபம் திரும்பியது* |

| | |
|---|---|
| புத்திரசுவிகாரம் | **ஐ**, மகனாக மாறுதல் |
| மறுஜென்மம்/புதிய பிறப்பு | **ஓ**, புதிய வாழ்க்கை |
| நீதிமானாக்கப்படுதல் | **ஆ**, நீதிமான்களாக எண்ணப்பட்டனர் |

## பாடம் 9

## இரட்சிப்பின் பிரச்சினைகள்

*(1) 1 யோவானின் முக்கிய கருப்பொருள் என்ன?*

*இரட்சிப்பின் தனிப்பட்ட உத்தரவாதம்*

*(2) ஒரு விசுவாசியில் காணப்படுகின்ற எந்தப் பண்பை 1 யோவான் மிகவும் வலியுறுத்துகிறது?*

*பாவத்தின் மீதுள்ள வெற்றி*

*(3) 1 கொரிந்தியர் 10:13 -லிருந்து எந்த நான்கு காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம்?*

- *சோதனை நம் மனிதர்களாக இருப்பதன் காரணமாக வருகிறது.*
- *தேவன் நமது வரம்புகளை அறிந்திருக்கிறார்.*
- *தேவன் சோதனையைக் கட்டுப்படுத்துகிறார்.*
- *வெற்றிக்குத் தேவையானதை தேவன் வழங்குகிறார்.*

*(4) ஒரு விசுவாசி எவ்வாறு கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்?*

*கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதன் மூலம்*

*(5) தொடர்ச்சியான இரட்சிப்புக்கு என்ன அவசியம்?*

*கிறிஸ்துவுடனான ஒரு தொடர்ச்சியான உறவு*

## பாடம் 10

## பரிசுத்த ஆவியானவர்

*(1) பரிசுத்த ஆவிக்கு ஆரம்பகால திருச்சபையின் மாறுத்திரமான மூன்று பண்புகளை பட்டியலிடுக.*

- *அவர்கள் பரிசுத்த ஆவியானவரை அவருடைய தெய்வத்துவத்தில் கனம்பண்ணினார்கள்.*
- *பரிசுத்த ஆவியின் இருப்பு, வழிகாட்டுதல் மற்றும் செயல்பாடு குறித்து அவர்கள் அறிந்திருந்தனர்.*
- *பரிசுத்த ஆவிக்கு பதிலளிப்பதில் தங்களுடைய சார்பு மற்றும் பொறுப்பை அவர்கள் உணர்ந்தனர்.*

*(2) பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை ஆள்தன்மையின் எந்த பண்புகள் காட்டுகின்றன?*

*அவருக்கு ஒரு மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகள் உள்ளன என்பவை.*

*(3) பாராகிலேட் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

- *நம்முடன் இருப்பவர்*
- *ஊக்குவித்து உதவுபவர்*
- *ஒரு பிரதிநிதி*

*(4) ஆவியானவரின் சில நடவடிக்கைகள் யாவை? கொடுக்கப்பட்ட 13ல் 9ஐப் பட்டியலிடுக.*

*ஏதேனும் ஒன்பது:*

- *அவர் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்.*
- *பாவத்தில் மரித்த நபருக்கு அவர் ஜீவனையளித்து, மீண்டும் ஜெநிப்பிக்கிறார்.*

- *அவர் இரட்சிக்கப்பட்டதாக விசுவாசிக்கு தனிப்பட்ட உத்தரவாதத்தை அளிக்கிறார்.*
- *அவர் ஒவ்வொரு விசுவாசியிலும் வாழ்கிறார்.*
- *அவர் தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை அறிந்துகொள்ள உதவுகிறார்.*
- *அவர் ஜனங்களை சிறப்பு ஊழியத்திற்காக அழைக்கிறார் மற்றும் ஊழியத்தில் எடுக்கும் தீர்மானங்களில் வழிநடத்துகிறார்.*
- *அவர் விசுவாசியை பரிசுத்தப்படுத்துகிறார், அவர்களைப் பரிசுத்தமாக்க அவர்களது இருதயத்தை பரிசுத்தப்படுத்துகிறார்.*
- *பாவத்தின் மீதான வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான பெலனை அவர் அளிக்கிறார்.*
- *விசுவாசியின் வாழ்க்கையில் அவர் ஆவியின் கனியைக் கொடுக்கிறார்.*
- *ஊழியத்திற்காக அவர் ஆவியின் வரங்களை அளிக்கிறார்.*
- *ஊழியத்திற்கு அவர் விசேஷித்த வல்லமையின் அபிஷேகத்தைக் கொடுக்கிறார்.*
- *தேவனுடைய சித்தத்தின்படி ஜெபம் செய்ய அவர் விசுவாசிக்கு உதவுகிறார்.*
- *அவர் திருச்சபையின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் உருவாக்குகிறார்.*

*(5) நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைக்கு அவர் எதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கிறார்?*

> *பாவத்தின் மீது வெற்றியைக் கொடுத்து, நம் இருதயங்களைப் பரிசுத்தப்படுத்துவதில் முக்கியத்துவம் கொடுக்கிறார்.*

## *பாடம் 11*

## கிறிஸ்தவப் பரிசுத்தம்

*(1) ஆராதனையின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*

*தேவனின் பரிசுத்தம்*

*(2) பரிசுத்தம் ஏன் ஆராதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது?*

*நாம் தேவனை நேசிக்கிறோம், அவரைப் பிரியப்படுத்தி அவரைப் போல இருக்க விரும்புகிறோம்.*

*(3) கிறிஸ்தவ பரிசுத்தம் எப்போது தொடங்குகிறது?*

*ஒரு நபர் இரட்சிக்கப்படும் போது*

*(4) வெளிச்சத்தில் நடப்பது என்றால் என்ன?*

*தேவனுடைய சத்தியத்தைப் பற்றி நாம் அதிகம் கற்றுக்கொள்ளும்போது, தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தொடர வேண்டும்*

*(5) தெசலோனிக்க திருச்சபை விசுவாசிகளுக்காக பவுல் என்னத்தை ஜெபித்தார்?*

*அவர்கள் பூரணமாகப் பரிசுத்தமாக்கப்படுவதற்கும், கிறிஸ்துவின் வருகையில் பரிசுத்தமாகக் காணப்படுவதற்கும்*

*(6) பெந்தெகொஸ்தே நாளில் நடந்த மிக முக்கியமான காரியம் என்ன?*

*அவர்களின் இருதயங்கள் தூய்மையடைந்தன.*

*(7) பரம்பரை சீரழிவு என்றால் என்ன?*

*மனிதனின் ஒழுக்க இயல்புகளின் சிதைவு அவனைப் பிறப்பிலிருந்தே பாவத்தின் பக்கமாய்ச் சாய்க்கிறது*

*(8) முழு பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன?*

*மனந்திரும்புதலுக்குப் பிறகு ஒரு கட்டத்தில் விசுவாசியில் பரிசுத்த ஆவியால் நிறைவேற்றப்பட்ட செயலான பரம்பரை சீரழிவைச் சுத்தப்படுத்துதல்.*

## *பாடம் 12*

## திருச்சபை

*(1) திருச்சபையின் யுகம் எப்போது தொடங்கியது?*

> *பெந்தெகொஸ்தே நாளில்*

*(2) திருச்சபையை ஏன் "அப்போஸ்த்தலிக்க" திருச்சபை என்று அழைக்கலாம்?*

> *ஏனெனில் அப்போஸ்தலர்களின் போதனைகள் திருச்சபையின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.*

*(3) திருச்சபைத் தோற்றத்தின் நான்கு அம்சங்கள் யாவை?*

- *இயேசுவின் ஊழியம்*
- *கிறிஸ்துவால் வழங்கப்பட்ட இரட்சிப்பு*
- *பெந்தெகொஸ்தே நாளில் சம்பவித்த நிகழ்வு*
- *அப்போஸ்தலருடைய உபதேசத்தின் வளர்ச்சி*

*(4) உலகளாவிய திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?*

> *எல்லா இடங்களிலும் காலங்களிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய நிறுவனம்*

*(5) உள்ளூர் திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?*

> *திருச்சபையின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்ற ஒரு இடத்தில் கூடிவரும் கிறிஸ்தவர்களின் குழு*

*(6) "கத்தோலிக்க திருச்சபை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

> *அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய உலகளாவிய திருச்சபை அல்லது உலகமெங்கிலும் உள்ள திருச்சபை*

*(7) திருச்சபையின் உலகளாவிய ஒற்றுமைக்கு அடிப்படையான இரண்டு காரியங்கள் யாவை?*

- *அப்போஸ்தலர்களின் உபதேசங்கள்*
- *கிறிஸ்துவுடனான மருரூபமடையும் உறவு*

*(8) எழுதப்பட்ட உபதேச அறிக்கையின் நோக்கம் என்ன?*

*விசுவாசிகளின் குழு ஒன்று சேர்ந்து செயல்படுவதற்குத் தேவையான உபதேசங்களைக் காட்டுவது.*

*(9) உள்ளூர் திருச்சபையின் ஆறு நோக்கங்களைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் ஆறு:*

- *சுவிசேஷம் அறிவித்தல்*
- *சபையாக ஆராதித்தல்*
- *உபதேசத்தைப் பராமரித்தல்*
- *போதகர்களை பண ரீதியாக ஆதரித்தல்*
- *மிஷனரிகளை அனுப்புதல் மற்றும் அவர்களை ஆதரித்தல்*
- *தேவைப்படும் திருச்சபை உறுப்பினர்களுக்கு உதவுதல்*
- *பாவத்தில் விழும் திருச்சபை உறுப்பினர்கள்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்*
- *ஞானஸ்நானம் எடுத்தல் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கைக்கொள்ளுதல்*
- *சீடர்களை ஆவிக்குரிய முதிர்ச்சி அடையச் செய்தல்*

# பாடம் 13

## நித்திய விதி

*(1) பரலோகத்தின் முதன்மை செயல்பாடு என்ன?*

*ஆராதனை*

*(2) பரலோகத்தில் இல்லாத சில விஷயங்கள் யாவை?*

*பாவம் மற்றும் பாவத்தின் விளைவுகள், முதுமை, வியாதி மற்றும் மரணம்*

*(3) யார் பரலோகம் செல்வார்கள்?*

*விசுவாசிகள் (பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவர்கள், ஜீவபுஸ்தகத்தில் பெயர்கள் உள்ளவர்கள்)*

*(4) விசுவாசிகள் எப்போது பரலோகம் செல்வார்கள்?*

*மரணத்தின் போது அல்லது இயேசு திரும்பி வரும்போது*

*(5) நரகத்தைப் பற்றி வேதாகமம் எந்த மூன்று விஷயங்களைச் சொல்கிறது?*

- *இது நித்தியமானது.*
- *இது மீள முடியாதது.*
- *இது வேதனையுள்ளது.*

*(6) ஒருவன் தனது கை அவனுக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போட வேண்டும் என்று இயேசு சொன்னதன் அர்த்தம் என்ன?*

*பாவம் மற்றும் நரகத்திற்கு வழிவகுக்கும் எதையும் செய்யாமல் தவிர்க்கவேண்டும்.*

*(7) நரகம் ஏன் நித்தியமானது?*

*ஏனெனில்...*

- *பாவம் என்பது எல்லையற்ற தேவனுக்கு எதிரான குற்றமாகும்.*
- *பாவிகள் தேவனுக்கு தாங்கள் செய்ய வேண்டிய நித்திய சேவையை மறுக்கின்றனர்.*
- *நாம் தேவனிடமிருந்து பிரிந்துசெல்ல தெரிந்துகொண்டால் வேறு எங்கும் செல்ல முடியாத நித்திய மனிதர்கள் நாம்.*

## *பாடம் 14*

## *கடைசிக்கால சம்பவங்கள்*

*(1) வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கடைசிக்கால சம்பவங்கள் பற்றிய தேவையான நான்கு சத்தியங்கள் யாவை?*

- *இயேசுவின் சரீரப்பிரகாரமான திரும்புதல்*
- *அனைத்து ஜனங்களின் சரீர உயிர்த்தெழுதல்*
- *நியாயத்தீர்ப்பு*
- *தேவனின் நித்திய ராஜ்யம்*

*(2) இயேசு மீண்டும் திரும்பி வரும்போது கிறிஸ்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?*

- *மரித்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.*
- *எல்லா கிறிஸ்தவர்களும் கர்த்தரைச் சந்திக்க எழுவார்கள்.*

*(3) இயேசுவின் வருகைக்காக நாம் எவ்வாறு காத்திருக்க வேண்டும்?*

*பின்வரும் காரியங்களால் நாம் அவர் வருகைக்காக காத்திருக்கிறோம்:*

- *நித்திய முன்னுரிமைகளை வைத்திருத்தல்*
- *பரிசுத்தமாக வாழ்தல்*
- *ஜெபத்தின் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் நம்மைக் காத்துக் கொள்ளுதல்*

*(4) உயிர்த்தெழுதல் உபதேசம் ஏன் அவசியம்?*

*ஏனெனில் அது பின்வரும் அர்த்தத்தைக் கொண்டுள்ளன:*

- *இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்*
- *அனைத்து ஜனங்களும் எழுப்பப்படுவார்கள்*
- *சரீரத்திற்கு நித்திய மதிப்பு உண்டு*
- *சுவிசேஷ நற்செய்தி உண்மை*

*(5) நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் தெரிந்துகொள்வது ஏன் முக்கியம்?*

*பின்வருபனவற்றை புரிந்துகொள்வதற்கு:*

- *பாவத்தின் முக்கியத்துவம்*
- *தேவனோடு நமக்குள்ள பொறுப்பு*
- *நமது தேர்ந்தெடுப்புகளின் முக்கியத்துவம்*
- *எல்லா பாவங்களுக்குமுள்ள முடிவு*

## *பாடம் 15*

## *பண்டைய சமயக் கோட்பாடுகள்*

*(1) சமயக் கோட்பாடு என்றால் என்ன?*

*முக்கியமான கிறிஸ்தவ நம்பிக்கைகளின் சுருக்கம்*

*(2) ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கு இயேசுவைப் பற்றிய எந்த இரண்டு கூற்றுகள் தேவையாயிருந்தன?*

- *இயேசு கர்த்தர்*
- *கர்த்தராகிய இயேசு கிறிஸ்து*

*(3) வேதாகமத்தில் பல கூற்றுக்களை முன்வைக்கும் முதல் சமயக் கோட்பாட்டிற்கான குறிப்பு என்ன?*

*1 தீமோத்தேயு 3:16*

*(4) அப்போஸ்தலர்களுடைய கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

*அப்போஸ்தலர்களின் உபதேசங்களை கூறுவது.*

*(5) நைசீன் கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

*கிறிஸ்துவின் தெய்வத்துவம் மற்றும் பரிசுத்த ஆவியின் கோட்பாடுகளைப் பாதுகாக்க.*

*(6) கால்செதோனிய கோட்பாட்டின் நோக்கம் என்ன?*

*கிறிஸ்து மாம்சத்தில் அவதாரமாக வந்ததன் கோட்பாடுகளை பாதுகாக்க.*